மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.303/2017</u>

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வரதராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>13.08.2025 பி.வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. பி.வா.சா.ஆ.1 ஆவணம் பழனிச்சாமி காலமாவதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் 5 வருடங்களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட ஆவணம். நல்லமுத்து மற்றும் சரஸ்வதி ஆகியோர்கள் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.87/2005 மற்றும் அசல் வழக்கு எண்.160/2006 ஆகிய வழக்குகளுக்கு பின்னிட்டு தான் பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. பி.வா.சா.ஆ.1 ஆவணம் பழனிச்சாமிக்கு தெரியாமல் அவரின் வயோதிக நிலையை பயன்படுத்தி கட்டாயப்படுத்தி அவரிடம் இருந்து உண்மைக்கு புறம்பாக எழுதி வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மற்றும் சரத்துக்கள் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு பின்னிட்டு மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய சொல்லி கேட்டு எனக்கும், பழனிச்சாமிக்கும் இடையே தாராபுரம், சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்தது என்றால் சரிதான். எனக்கு மூன்றாம் நபருக்கு இடையே பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தைப் பொறுத்து ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டு அதன் அடிப்படையில் தாராபுரம், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்தது என்றால் இல்லை.

3. தாவா சொத்துக்கு வாரிசு என்ற முறையில் நான் உரிமையாளர் இல்லை என்ற காரணத்தினால் தான் என்னுடன் மூன்றாம் நபர் ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஒப்பந்தத்தை அவர் ரத்து செய்து கொண்டு போய்விட்டார் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எனக்கு வேண்டிய நபர்களை சாட்சியாக வைத்துக்கொண்டு நான் மோசடியாக தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பழனிச்சாமி என்பவர் விஜயா என்பவர் மூலம் தனக்கு குழந்தைகள் எதுவும் இல்லை என நீதிமன்றத்திலேயே சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

4. நான் உண்மையை மறைத்து பழனிச்சாமி என்பவரின் சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்தில் பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பழனிச்சாமி என்பவரின் வாரிசு அல்ல என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் பெயர் ரங்கசாமி என்றும், மேற்படி ரங்கசாமி மற்றும் விஜயா ஆகியோர்களுக்கு தான் நான் பிறந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

5. 3ம் பிரதிவாதி சரஸ்வதி என்பவரின் இயலாமையை நான் தவறாக பயன்படுத்திக் கொண்டு நான் பொய்யான சங்கதிகள் சொல்லி இந்த வழக்கில் கட்சி செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நானும் என் தாய் மற்றும் தகப்பனார் ஆகியோர் செங்கல் சூளைக்கு வேலைக்கு வந்து வெள்ள கோவிலில் வந்து தங்கி பணிபுரிந்தோம் என்றும், அதை பயன்படுத்தி 3ம் பிரதிவாதிக்கும் பழனிச்சாமிக்கும் இடையே இருந்த பிரச்சனையை பயன்படுத்திக் கொண்டு தவறான ஆவணங்களை உற்பத்தி செய்து நாங்கள் எதிர் வழக்காடி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. நான் பழனிச்சாமிக்கும் எனது தாயார் விஜயாவிற்கும் பிறந்த குழந்தை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே நான் பழனிச்சாமி என்பவரின் சட்டபூர்வமான வாரிசு ஆக முடியாது என்று சொன்னால் சரியல்ல.

(5ம் பிரதிவாதிதரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்படுகிறது)

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என் தாயாருக்கும் பழனிச்சாமிக்கும் எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்பதற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருமணம் எப்போது நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் 1976 ஆம் ஆண்டு நடந்ததாக சொன்னார்கள். என் தாயாரும் பழனிச்சாமி என்பவரும் வேறு வேறு வகுப்பைச் சார்ந்தவர்கள் என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 3ம் பிரதிவாதியாக உள்ள சரஸ்வதி என்பவர் பழனிச்சாமி என்பவரின் முதல் மனைவி என்றால் சரிதான்.

2. சரஸ்வதி எந்த ஊரைச் சார்ந்தவர் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சரஸ்வதியும், பழனிச்சாமியும் ஒரே ஜாதியை சேர்ந்தவர்கள் என்றால் அது எனக்கு தெரியாது. பழனிச்சாமியின் தகப்பனார் பெயர் முத்துசாமி கவுண்டர் என்றால் சரிதான். கடந்த 28 1 1974 கச்சேரி வலசில் உள்ள 3ம் பிரதிவாதி வீட்டில் வைத்து 3ம் பிரதிவாதிக்கும், பழனிச்சாமி என்பவருக்கும் திருமணம் நடந்தது என்றால் அது எனக்கு தெரியாது.

3. பழனிச்சாமியின் தாயார் பெயர் கருணையம்மாள் என்றால் ஆமாம். முத்துசாமி இறந்ததற்கு பின்பு பழனிச்சாமியும், கருணையம்மாளும் வெள்ளகோவில் ஈரோடு ரோட்டில் உள்ள கதவு எண்.379 இல் வசித்து வந்தார்கள் என்றால் ஆமாம். பழனிச்சாமி கவுண்டர் குடியிருந்து வந்த வீடு மற்றும் இதர சொத்துக்கள் முத்துசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் 1957 ஆம் வருட பாகப்பிரிவினையில் பி அட்டவணை சொத்துக்களாக ஒதுக்கப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி பழனிச்சாமி தான் உயிரோடு இருந்த காலத்தில் செங்கல் சூளை வைத்தும், லாரி வைத்தும் தொழில் செய்து வந்தார் என்றால், லாரி மட்டும் தான் வைத்திருந்தார்.

4. கருணையம்மாள் வெள்ளகோவில் ஈரோடு ரோட்டில் உள்ள கதவு எண் 379 ல் வைத்து காலமானார் என்றால், கதவு எண்.4/379 வைத்து காலமானார். வாதி சாமிநாதன், பழனிச்சாமி மற்றும் நல்லமுத்து ஆகியோர்களுக்கு பிறந்த குழந்தை என்றால் அது எனக்கு தெரியாது. சாமிநாதன் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் அழைப்பானை வந்ததற்கு பின்னிட்டு வாதி சாமிநாதன் யார்

என்பதை குறித்து நான் விசாரித்தேனா என்றால் இல்லை. 3ம் பிரதிவாதிக்கும், பழனிச்சாமி என்பவருக்கும் ஜீவனாம்சம் குறித்து அசல் வழக்கு எண்.87/2005 என்ற வழக்கானது நடைபெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

5. அந்த வழக்கில் 3ம் பிரதிவாதி இந்த வழக்கின் தாவா சொத்துக்களை சொத்து விவரமாக காட்டி தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் 3ம் பிரதிவாதிக்கு பழனிச்சாமி என்பவர் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான் மேற்படி ஜீவனாம்ச வழக்கில் 3ம் பிரதிவாதி இடைக்கால மனு எண்.418/2005 என்ற மனுவை தாக்கல் செய்து வழக்கு முடியும் வரை அவ்வழக்கின் தாவா சொத்துக்களை எந்தவித விலங்கமும் செய்யக்கூடாது என்ற இடைக்கால உறுத்துக் கட்டளை பெற்றிருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதிக்கும், பழனிச்சாமி என்பவருக்கும் குழந்தைகள் எதுவும் இல்லை என்றால் ஆமாம்.

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் பி.வா.சா.2ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.08.13 18:37:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்